## ABSTRACT

Schemes – State Scheme – School Infrastructure Development Scheme (SIDS) – Implementation of the Scheme during the year 2022-2023 at an estimated cost of Rs.194,65,00,000 for taking up repair and renovation works in Panchayat Union Primary Schools (PUPS) and Panchayat Union Middle Schools (PUMS) to saturate Anaithu Grama Anna Marumalarchi Thittam – II (AGAMT-II) (2022-23) Villages - Administrative Sanction – Guidelines prescribed - Orders – Issued.

---

**Rural Development and Panchayat Raj (SGS.1) Department**

**G.O. (Ms.) No.64**

**Dated:20.04.2023**
**சோபகிருது, சித்திரை 7–ந் தேதி**
**திருவள்ளுவர் ஆண்டு-2054**

**Read:**

1. From the Commissioner of Rural Development and Panchayat Raj Letter No.56457/2022/TU4, dated 21.11.2022 and 15.3.2023.
2. G.O.(Ms) No.39, Rural Development and Panchayat Raj [PR.1(2)] Department, dated 25.03.2023.
3. G.O.(Ms) No.45, Rural Development and Panchayat Raj [PR.1(2)] Department, dated 28.03.2023

-------

**ORDER:**

The Hon'ble Chief Minister of Tamil Nadu has made the following Announcement on the Floor of the Tamil Nadu Assembly on 19.10.2022:-

"பள்ளிகளின் பராமரிப்புப் பணிகளுக்கென நடப்பாண்டில் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ள சுமார் 150 கோடி ரூபாய் நிதியுடன் சேர்த்து, தற்போது 115 கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்."

2. Based on the above Announcement, in the Letter first read above, the Commissioner of Rural Development and Panchayat Raj has sent a proposal stating that the Panchayat Union Primary Schools (PUPS) and Panchayat Union Middle Schools (PUMS) located in rural and urban areas are the property of the Panchayat Unions concerned. As per Section 112 of Tamil Nadu Panchayat Act, 1994, it is the statutory responsibility of the Panchayat Unions concerned to ensure the proper maintenance of infrastructure facilities in these Schools. Since most of the

Panchayat Union School Buildings were constructed 30 years before, maintenance of school infrastructure facilities is the timely need of all Panchayat Union Primary Schools (PUPS) and Panchayat Union Middle Schools (PUMS) to prevent further deterioration of the building and also to create conducive environment for the school going children.

3. He has further stated that the School Infrastructure Development Scheme mainly aims to undertake repair and renovation of existing school buildings / class rooms, school toilets (both for boys & girls), Kitchen sheds and repairs to water supply facilities in Panchayat Union Primary Schools (PUPS) and Panchayat Union Middle Schools (PUMS) located in rural and urban areas of Anaithu Grama Anna Marumalarchi Thittam–II villages. In this regard, proposals have been received from all the 37 Districts of Tamil Nadu for undertaking the repair and renovation of school infrastructure facilities in 2,544 AGAMT II Villages in saturation mode for the year 2022-23 as detailed below:-

**(District wise abstract is enclosed in the Annexure)**

| Sl. No | Type of work | Total Nos. | Total Amount (Rs. in Lakh) |
|---|---|---|---|
| 1 | Repairs to existing school buildings | 4656 | 17044.31 |
| 2 | Repairs to existing toilets | 2522 | 1302.84 |
| 3 | Repairs to existing water supplies | 149 | 193.89 |
| 4 | Repairs to existing Kitchen sheds | 1497 | 924.63 |
| **Total** | | **8,824** | **19,465.67** |

From the above, a sum of Rs.194.65 Crore will be required to execute 8,824 repair and renovation works in 3,195 Panchayat Union Primary and Middle Schools located in AGAMT II 2022-23 villages.

4. The Commissioner of Rural Development and Panchayat Raj has therefore requested the Government to sanction the amount for a sum of 194.65 crore for the implementation of School Infrastructure Development Scheme (SIDS) for the year 2022-23 for taking up repair and renovation works in PUPS and PUMS to saturate AGAMT-II (2022-23) villages.

5. The Government have carefully examined the proposal of the Commissioner of Rural Development and Panchayat Raj for the implementation of School Infrastructure Development Scheme (SIDS) for the year 2022-2023 for taking up repair and renovation works in Panchayat Union Primary Schools (PUPS) and Panchayat Union Middle Schools (PUMS) to saturate AGAMT-II (2022-23) Villages in detail and decided to accept the same and issue the following orders:-

(i) Administrative Sanction is accorded to the tune of Rs.194,65,00,000/- (Rupees One hundred and ninety four Crore and sixty five Lakh only) for taking up repair and renovation works in PUPS and PUMS to saturate

AGAMT-II (2022-23) under School Infrastructure Development Scheme (SIDS) for the year 2022-23;

(ii) The Commissioner of Rural Development and Panchayat Raj is permitted to utilize the funds to the extent of Rs.194,65,00,000/- for the sanction made in para 5(i) above out of the funds already released as detailed below:-

| Head of Account | Amount already released | Government Order |
|---|---|---|
| 3604 00 200 CG Operations Maintenance Grant Fund – Schools | Rs.60,00,00,000 | G.O. (Ms) No.39, Rural Development and Panchayat Raj [PR.1(2)] Department, dated 25.03.2023. |
| 3604 00 200 BW State Level Capital Grant Fund - Schools | Rs.140,00,00,000 | G.O. (Ms) No.45, Rural Development and Panchayat Raj [PR.1(2)] Department, dated 28.03.2023. |

(iii) Detailed Guidelines for the implementation of School Infrastructure Development Scheme (SIDS) for the year 2022-2023 is annexed to this order.

6. The Commissioner of Rural Development and Panchayat Raj is requested to ensure the proper utilization of proposed fund with utilization certificate and to send the periodical progress report to Government. Further, he is directed to monitor the works very closely and ensure that the quality of works done as per norms. Three stages of photography of all works, (i.e) prior, during and after the completion of works is mandatory.

7. This order issues with the concurrence of Finance Department vide its U.O.No.46/Finance(RD)/2023, dated: 14.04.2023.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**P. AMUDHA**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

To
The Commissioner of Rural Development and Panchayat Raj, Chennai–15.
All District Collectors (except Chennai)
(through the Commissioner of Rural Development and Panchayat Raj, Chennai–15).
All Project Directors, District Rural Development Agencies,
(through the Commissioner of Rural Development and Panchayat Raj, Chennai–15).
The Commissioner of Treasuries and Accounts, Chennai-35.
The Principal Accountant General, Chennai - 9/18/35.
The Pay and Accounts Officer (Secretariat), Chennai-9.
The Pay and Accounts Officer (East, North, South), Chennai-8/1/35.

The Pay and Accounts Officer, Madurai.
All District Treasury Officers.
The National Informatics Centre, Chennai-9.

**Copy to**

Hon'ble Chief Minister's Office, Chennai-9.
The Special Personal Assistant to Hon'ble Minister for Rural Development, Chennai-9.
The Private Secretary to Chief Secretary to Government, Chennai-9.
The Principal Private Secretary to Principal Secretary to Government, Rural Development and Panchayat Raj Department, Chennai –9.
The Private Secretary to Principal Secretary to Government, School Education Department, Chennai –9.
Finance (BG-I/BG-II/RD) Department, Chennai – 9.

**// FORWARDED BY ORDER //**

[signature]/20-4-2023
Section Officer.

## G.O. (Ms) No.64, RURAL DEVELOPMENT AND PANCHAYAT RAJ (SGS.1) DEPARTMENT, DATED 20.04.2023

## ANNEXURE

## Guidelines for School Infrastructure Development Scheme (SIDS) 2022-23

### Introduction:

Panchayat Union Primary and Middle Schools located in rural and urban areas are the property of the Panchayat Unions concerned. As per section 112 of the Tamil Nadu Panchayats Act, 1994, it is the statutory responsibility of the Panchayat Unions concerned to ensure the maintenance of infrastructure facilities in these schools.

This scheme aims to facilitate discharge of the above statutory obligations of the Panchayat Unions and ensure the maintenance and renovation of existing infrastructure facilities in the Panchayat Union Primary Schools (PUPS) and Panchayat Union Middle Schools (PUMS) located in rural and urban areas.

The programme envisages improvement of all the PUPS and PUMS in rural and urban areas in a phased manner.

### 1. Selection of schools:

a. All the PUPS and PUMS located in 2,544 Village panchayats identified for implementation of AGAMT II 2022-23 should be covered under SIDS 2022-23.

b. The PUPS and PUMS located in urban areas shall also be taken up.

c. Before taking up repair and renovation work of the existing building, a certificate of structural stability shall be obtained from the Assistant Executive Engineer (RD) concerned.

d. Repair and renovation work required shall be taken up only in those PUPS and PUMS where repair and renovation have not been carried out in the last 5 years under any other scheme.

### 2. Type of Repair and Renovation works

It has to be ensured that all PUPS and PUMS located in the above-mentioned Village Panchayats are inspected and all school infrastructure facilities in the school campus such as class room buildings, Kitchen sheds, Toilets, Water supply which require repair/ renovation are included in the proposal without any omission through proper inspection. The repair to the existing facilities inside the school shall be taken up strictly in the following order of priority: -

#### a). Repairs to existing toilets

The following repair works in existing toilets shall be taken up

i. The repairs and renovation of the existing toilets like repairs to roof, walls, floors, drains, squatting pans, washbasins, septic tanks, etc.

ii. Wherever required, floors may be paved with anti-slippery tiles.

iii. Water supply facility should be provided in the toilets, either by providing taps and/ or constructing water storage tank.

iv. White washing and colour washing of the toilets (except those toilets, where white washing/ colour washing was done within the last 3 years under any other scheme).

**b). Provision of conventional Chulhas**

Conventional Chulhas may be provided in place of incinerators. Provision of new incinerators may be avoided. Wherever chulhas are provided the safety of students should be ensured.

**c). Repairs to existing water supply works**

i. If the existing water supply system is damaged, repairs should be carried out to provide water supply to the school.

ii. Extension of pipe line work may be taken up wherever required.

iii. Water supply facilities is mandatory in all toilets in PUPS and PUMS.

iv. If required, new drinking water supply connection may be provided from the nearby water supply line or Over Head Tank (OHT) of the Panchayat along with a small overhead storage tank. Borewell water can be provided for other utilities.

v. The tanks being installed should be Sintex tanks and providing Cement/ concrete tanks should be avoided. Wherever necessary, new borewell can also be taken up with a storage tank.

vi. Wherever necessary, Rain Water Harvesting Structure (RWH) shall be constructed.

**d). Repairs to existing school class room building and school land area**

The following works are permitted.

i. Repair / new / replacement of ramp and steps with hand rails to all buildings

ii. Undertaking repairs of RCC roof (in terms of laying weathering course with pressed tiles or taking up leak proofing etc) along with the provisions of rainwater harvesting wherever the provisions are not available or damaged.

iii. Repairs of damaged tiles / rafters / reapers in buildings with tiled roofing.

iv. The existing damaged Mangalore tiled buildings, which are beyond the scope of being re-roofed should be replaced with Poly Urethane Foam Panel (PUF panel) for thermal proof and noise insulation. The existing truss system can be re-fabricated to required slope if necessary.

v. Repairs to RCC ceiling as per the requirement.

vi. Repairs to cracks in walls.

vii. Repair/ replacement of doors and windows.

viii. Repair/ replacement of damaged flooring with anti-slippery Shahabad stones/ Kotta stones,

ix. Painting of Black boards may be taken up wherever required. In case of replacement, provision of Magnetic Steel ceramic green writing board of required size with aluminium sheet back covering shall be provided.

x. Repair/ replacement of wiring where there are issues with electrical fittings. Wiring and electrical provisions may be given for future upgradation with smart class room facility.

xi. Colour washing of the buildings with interiors using oil bound distemper and exterior using only emulsion (except those buildings where white washing / colour washing was done within the last 3 years under any other scheme).

xii. As per the Commissioner, School Education Department D.O. Lr.No.045822/CSE/2O22, dated 12.08.2022, BaLA painting may be provided to impart visual information to children on basic educational concepts which can be of pictorial, numerical or alphabetic information.

**e) Repairs to existing Kitchen sheds**

Existing kitchen shed building which are in damaged condition, can be repaired and renovated, if it is structurally stable and if not repaired for the last 5 years under any scheme.

**3. Selection and finalization of works:**

**A.** With regard to the selection and finalization of works the following procedures have to be followed.

i) A committee comprising of following members should be constituted to list out the details of works to be done.

1. Block Development Officer (Block Panchayat)
2. Assistant Engineer (RD)/ Block Engineer / Junior Engineer
3. Block Educational Officer (BEO) concerned
4. Head Master of the particular school.
5. Concerned Village Panchayat President.

ii) The above committee members should inspect each and every building, utilities and play ground in the school campus, update the requirements in the EMIS (the Head Master / Head Mistress of the

school shall do this work) and finalize the requirements & list of works to be taken up in the PUPS and PUMS.

iii) The detailed format to finalize the repair works shall be communicated to the districts, as "Assessment sheet", by the Commissioner of Rural Development and Panchayat Raj.

iv) Once the works are finalized by the committee, the same shall be uploaded on the TNRD website (SIDS module).

**B.** If the committee is of the opinion that a particular school building, kitchen shed or toilet is in dilapidated condition and requires total replacement, the committee shall recommend for demolition of the building. Accordingly, the Executive Engineer (RD) shall take necessary action for demolition of the building after following the due procedures stipulated in G.O.(Ms) No.56 RD&PR (SGS.4) Dept., Dt.03.04.2008 and amendment issued vide G.O.Ms.No.28, RD & PR (SGS.4) Dept., dated 23.2.2015.

**C.** The progress of the works shall be uploaded on the SIDS module on the TNRD website regularly.

**4. Test verification of the works proposed:**

It is imperative that, from the beginning itself extensive field visits backed by proper test checks should be undertaken at the stage of preparation of estimates itself which would facilitate in preparing exact estimates. During the test check, the following issues should be ensured:

i) All essential item of repair works are included without omission.

ii) Unnecessary items of works are not included.

iii) Detailed estimates have been prepared.

iv) Any item not permitted in this scheme has not been included.

The correctness of selection of buildings and type of repairs should be test verified by the following officials as detailed below.

| | | |
|---|---|---|
| i) | District Collector | 1% |
| ii) | Project Director, DRDA | 10% |
| iii) | Executive Engineer, RD | 20% |

100% verification should be done by the Assistant Director Level Officers/ AEEs (RD).

**5. Administrative sanction:**

The administrative sanction shall be accorded by the District Collector. Before according administrative sanction, the District Collector should ensure that every proposal for administrative sanction contains the following:

i) "Assessment sheet" duly signed by members of the selection committee mentioned in paragraph no.3

ii) Required percentage of test check by District Level Officials and 100% verification by AD/ AEE (RD) level officers have been satisfactorily completed as mentioned in paragraph no.4.

iii) Detailed estimates for each work should be prepared. In any case, no work should be proposed as per rough cost estimate.

iv) Multiple photographs depicting inner and outer view of the school building, kitchen shed/ toilet should be taken and enclosed along with the estimate itself. If photographs are not enclosed, administrative sanction should not be given by the District Collector.

**Note:** For the purpose of fixation of number of works or to have comprehensive estimates, the works may be treated as follows.

- All school building/class room repairs, in the school campus shall be treated as one work.
- All toilet repairs in the school campus shall be treated as one work.
- All kitchen shed repairs in the school campus shall be treated as one work.
- All water supply repair works in the school campus shall be treated as one work.

**Illustration:**

If in a school campus, 2 school buildings, 2 toilets, 1 kitchen shed are to be repaired and 1 new water supply and one Chulha works are to be taken up, then the number of works shall be fixed as:

1 School building repair work

1 Toilet repair work

1 Kitchen shed repair work

Provision of 1 new water supply

Provision of 1 new Chulha

Thus, totally 5 works should be taken up in the campus.

**6. Technical sanction**

Technical sanction should be accorded by the competent authority as per GO (Ms) No, 111, Rural Development and Panchayat Raj (PR-1) Department, dated 21.08.2018.

**7. Tendering of works:**

Tender rules should be scrupulously followed in the tendering process. The work shall be executed through e-tendering process. The Block Development Officer (Block Panchayat) shall be the tender inviting as well as tender accepting authority.

The Tamil Nadu Transparency in Tenders Act, 1998 and Rules, 2000 shall be adopted for tendering. The provisions of Table I and Table II of Notification II in the Tamil Nadu Panchayats (Preparation of Plans and Estimate of works and mode and conditions of contracts) Rules, 2007 vide G.O. (Ms) No.203, Rural Development and Panchayat Raj (PR.I) Department, dated 20.12.2007 has to be followed with respect to the Tender Inviting Authority and Accepting Authority.

All the maintenance / repair works within a school campus shall be treated as one package for tendering purpose. For example, 1 school building repair, 1 toilet building repair, 1 kitchen shed building repair and 1 work water supply work will be grouped into one package and the tender shall be invited for the package.

**8. Implementation procedures**

Measurements and Check measurements of works sanctioned under this scheme shall be recorded as per G.O. (Ms) No.111, Rural Development and Panchayat Raj (PR-1) Department, dated 21.08.2018.

**9. Funds:**

Funds will be allocated by the Commissioner of Rural Development and Panchayat Raj to districts as per the requirements based on actual estimates received from the District Collectors. The Commissioner of Rural Development and Panchayat Raj will keep funds in a separate account opened for this purpose and will be released to District Collectors based on the progress. District Collectors/ Chairman, DRDA should keep funds separately in the account opened for the above scheme at district level. The Block Development Office (Block panchayat) shall also keep a separate account at block level. The District Collector shall reallocate the amount to the Blocks, based on the proposals received from the blocks and the fund shall be released by the District Collector/ Chairman, DRDA to the blocks concerned. All the Bank accounts shall be opened only in Nationalised Banks.

**10. Quality control**

The executing agency shall maintain site order book and a quality control register for testing of all construction materials used and item of works executed as required and it should be periodically verified by the inspecting officers. Apart from in house quality control mechanism, an independent 3rd Party Quality Monitors i.e. State Quality Monitors – SQM (Schemes) shall be deputed for monitoring the quality of works executed under this scheme.

**11. Documentation:**

Documentation should be done detailing various processes in the implementation of the scheme, starting from identification of the works, during execution of works upto the completion. The before and after photos and status of

completion of works should be recorded in EMIS. Once the work is over, the fact that the school repair/renovation works has been completed, the name of the scheme i.e., School Infrastructure Development Scheme (SIDS) should be prominently displayed in Tamil along with the amount incurred on a portion of the building renovated. High Resolution photographs should be uploaded in the TNRD website immediately after the completion of works.

The Principal Secretary to Government, Rural Development and Panchayat Raj Department, in consultation with the Commissioner of Rural Development and Panchayat Raj, is empowered to modify any of the above guidelines based on exigencies that may arise from time to time.

**P.AMUDHA**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

**//TRUE COPY//**

20-4-2023
**Section Officer.**

**அரசாணை (நிலை) எண்.64, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி.1) துறை, நாள் 20.04.2023**

**இணைப்பு**

**பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கான (2022-23) வழிகாட்டு நெறிமுறைகள்.**

முன்னுரை

ஊரக மற்றும் நகர்ப்புர பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகள், சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் சொத்தாகும். இப்பள்ளிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை பராமரித்தல் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ல் பிரிவு 112-ன் படி, ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும்.

ஊரக மற்றும் நகர்ப்புர பகுதிகளில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளை பராமரித்தல், பழுதுபார்த்தல், புனரமைத்தல் மற்றும் பள்ளி உட்கட்டமைப்பு வசதிகளை புதுப்பித்துத் தருவதே பள்ளி உட்கட்டமைப்புத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்த திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புர பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் மேம்பாட்டைப் படிப்படியாக உயர்த்த வழிவகுக்கும்.

1. பள்ளிகளைத் தேர்வு செய்தல்

அ. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்-II (2022-23)-ஐ செயல்படுத்த, தேர்ந்தெடுக்கப்பட்ட 2,544 கிராமங்களில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளையும், பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட (2022-23)-த்தின் கீழ் தேர்வு செய்ய வேண்டும்.

ஆ. பேரூராட்சிகளில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளை இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யலாம்.

இ. பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் போன்ற பணிகள் மேற்கொள்வதற்கு முன் கட்டடத்தின் உறுதித் தன்மை

குறித்து உதவி செயற்பொறியாளரின் (ஊரக வளர்ச்சி) சான்று பெறப்பட வேண்டும்.

ஈ. கடந்த ஐந்தாண்டுகளில் வேறு எவ்வித திட்டத்திலும் பழுதுநீக்கம் மற்றும் புனரமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்படாத ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் மட்டுமே தேவையின் அடிப்படையில் பழுதுநீக்கம் மற்றும் புனரமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**2. பழுது நீக்கம் மற்றும் புனரமைத்தல் பணிகளின் வகைப்பாடு**

மேற்குறிப்பிட்ட கிராமங்களில் அமைந்துள்ள அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளையும் ஆய்வு செய்து, பள்ளி வளாகத்தில் உள்ள வகுப்பறைக் கட்டடங்கள், சமையலறைக் கூடங்கள், கழிப்பறைகள் மற்றும் குடிநீர் வசதி ஆகியவற்றை பழுதுநீக்கம் மற்றும் புனரமைத்தல் பணிகளை முறையான ஆய்வின் மூலம் கண்டறிந்து முன்மொழிவில் சேர்க்கப்பட்டுள்ளதை உறுதி செய்ய வேண்டும். பள்ளிகளில் ஏற்கனவே இருக்கும் வசதிகளில் உள்ள பழுதுகளை, பழுதுநீக்கம் செய்வதற்கு, கீழ்க்காணும் முன்னுரிமையின் அடிப்படையில் பணிகள் எடுக்கப்பட வேண்டும்.

**அ). ஏற்கனவே உள்ள கழிப்பறைகளை பழுது நீக்கம் செய்தல்**

ஏற்கனவே உள்ள கழிப்பறைகளில் கீழ்க்கண்ட பழுதுநீக்கப் பணிகளை எடுத்துச் செய்யலாம்.

i. பள்ளி கழிப்பறைகளின் கான்கிரீட் கூரை, சுவர், தரை, வடிகால், கழிப்பறை கோப்பை, கை கழுவும் தொட்டி, கழிவுநீர்த் தொட்டி ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுதுநீக்கம்/புனரமைத்தல் பணிகளைச் செய்யலாம்.
ii. தேவை ஏற்படும் இடங்களில், தரையில் வழுக்காத தரை ஓடுகள் (Anti- slippery Tiles ) பதிக்கலாம்.
iii. கழிப்பறைகளில் தண்ணீர் வசதி, குழாய் அல்லது நீர்த் தேக்க தொட்டி ஏற்படுத்தப்பட வேண்டும்.

iv. கழிப்பறைகளுக்கு வெள்ளை / வர்ணம் பூசலாம். (3 வருடங்களுக்குள் பிற திட்டங்களின் கீழ் வெள்ளை / வர்ணம் பூசப்பட்ட கழிப்பறைகள் தவிர)

**ஆ). எரியூட்டிகளுக்கு பதிலாக புகையில்லா அடுப்புகளை அமைத்தல்**

எரியூட்டிகளுக்குப் (incinerator) பதிலாக புகையில்லா அடுப்பு (Chulhas) அமைக்கப்படலாம். புதிய எரியூட்டிகள் அமைப்பது தவிர்க்கப்பட வேண்டும். புகையில்லா அடுப்பு அமைக்கப்படும் போது, மாணவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும்.

**இ). ஏற்கனவே உள்ள குடிநீர் வசதி அமைப்புகளுக்கான பழுது நீக்கம் செய்தல் பணிகள்**

i. பள்ளிகளில் உள்ள குடிநீர் வசதி அமைப்புகள் பழுதடைந்து இருப்பின், அவை பழுது பார்க்கப்பட்டு பாதுகாப்பான குடிநீர் வழங்கப்பட வேண்டும்.

ii. தேவை ஏற்படும் இடங்களில் குடிநீர் குழாய் நீட்டிப்பு பணிகள் மேற்கொள்ளலாம்.

iii. ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளின் அனைத்து கழிப்பறைகளிலும் தண்ணீர் வசதி உள்ளதை உறுதிப்படுத்த வேண்டும்.

iv. புதிய குடிநீர் இணைப்புகள் தேவைப்படின், அருகிலுள்ள குடிநீர் இணைப்புகளிலிருந்து அல்லது ஊராட்சியின் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து, சிறிய மேல்நிலை சேகரிப்பு தொட்டியுடன் கூடிய வசதி செய்து கொள்ளலாம். பிற பயன்பாடுகளுக்கு ஆழ்துளை கிணற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

v. சின்டெக்ஸ் தொட்டிகள் (Syntex tanks) மட்டுமே அமைக்கப்பட வேண்டும். சிமெண்ட்/கான்கிரீட் தொட்டிகள் தவிர்க்கப்பட வேண்டும். தேவையான இடங்களில் புதிய ஆழ்துளை கிணறு நீர்த் தேக்கத் தொட்டியுடன் அமைக்கலாம்.

vi. தேவையான இடங்களில் மழைநீர் சேகரிப்பு தொட்டிகள் கட்டலாம்.

**ஈ). ஏற்கனவே உள்ள பள்ளி வகுப்பறை கட்டடம் மற்றும் பள்ளி வளாகங்களை பழுதுநீக்கம் செய்தல்**

கீழ்க்கண்ட பணிகள் அனுமதிக்கப்படுகிறது.

i. பழுதடைந்த சாய்தளங்களை பழுதுநீக்கம் செய்தல், கைப்பிடியுடனான புதிய சாய்தளம் அனைத்துக் கட்டடங்களிலும் அமைத்தல்.

ii. பழுதடைந்த கான்கிரீட் கூரைகளை பழுதுநீக்கம் பணியினை மேற்கொள்ளும்போது (தண்ணீர் கசியாத வகையில் சுண்ணாம்பு செங்கல் கலவை (Weathering course) சேர்த்தல் அல்லது தட்டு ஓடு பதித்தல் போன்றவை), மழைநீர் சேகரிப்பு தொட்டி இல்லாமல் இருப்பின் அல்லது பழுதடைந்திருப்பின், அவ்விடங்களில் அந்த வசதியை ஏற்படுத்தித் தரலாம்.

iii. சிறிதளவு பழுதடைந்த ஓடுகள்/உத்திரம்/ஓடுகள் வேயப்பட்ட கட்டடங்களிலுள்ள பட்டிகள் பழுதுநீக்கம் செய்தல்.

iv. தற்போது சேதமடைந்துள்ள மங்களூர் ஓடு வேயப்பட்ட கட்டடங்களில் மீண்டும் அதே கூரை அமைக்க முடியாத நிலையில் இருந்தால், அவைகளை வெப்பத்தையும் ஒலி மாசுவையும் குறைப்பதற்காக PUF (Poly Urethane Foam) panel மூலம் கூரையினை மாற்றி அமைக்கலாம். கூரையின் அமைப்பிற்கு தகுந்தவாறு தற்போதுள்ள வளைய அமைப்பை மீண்டும் தேவையான சாய்வுக்கு மாற்றி அமைக்கலாம்.

v. தேவைக்கு ஏற்ப கான்கிரீட் கூரையைப் பழுதுநீக்கம் செய்தல்.

vi. கட்டட சுவர்களில் ஏற்பட்ட விரிசல்களைப் பழுதுநீக்கம் செய்தல்.

vii. பழுதடைந்த கதவுகள் மற்றும் சன்னல்களைப் பழுதுநீக்குதல்/மாற்றியமைத்தல்.

viii. பழுதடைந்த தரையை வழுக்காத Shahabad மற்றும் கோட்டா (Kotta) கற்பலகை மூலம் பழுதுநீக்குதல்/மாற்றியமைத்தல்.

ix. தேவைப்படும் இடங்களில் கரும்பலகைகளுக்கு வண்ணம் பூசுதல். கரும்பலகைகளை புதிதாக மாற்றும் பட்சத்தில், பின்புறத்தில் அலுமினியத் தகடு பொருத்தப்பட்ட Magnetic Steel Ceramic பச்சை எழுத்துப் பலகையாக மாற்றியமைக்கலாம்.

x. பழுதடைந்த மின்கம்பிகளால் (wire), மின்சாதனங்கள் இயக்குவதில் இடையூறு உள்ள இடங்களில், அத்தகைய மின்கம்பிகளை மாற்றியமைத்தல். தற்போதுள்ள வகுப்பறைகளை எதிர்காலங்களில் நுண்திறன் வகுப்பறைகளாக (Smart class) மேம்படுத்துவதற்கு தேவைப்படும் மின் வசதிகளை ஏற்படுத்தலாம்.

xi. கட்டடங்களுக்கு உள்ளே எண்ணெய் வண்ணங்களும் (oil bound distember) கட்டடங்களுக்கு வெளியே எமெல்சன் (emulsion) வண்ணங்களும் பயன்படுத்தப்பட வேண்டும். (இது கடந்த 3 வருடங்களுக்குள் யாதொரு திட்டத்திலும், கட்டடங்களுக்கு வெள்ளை/வர்ணம் பூசுதல் பணி மேற்கொள்ளப்பட்ட பள்ளிகளுக்கு பொருந்தாது).

xii. கல்வித்துறை ஆணையர் அவர்களின் நேர்முக கடித எண். 045822/CSE/2022, நாள். 12.08.2022- ன் படி, மாணவர்களுக்கு படங்களுடன் கூடிய எண் அல்லது அகரவரிசைத் தகவல்களைக் கொண்ட அடிப்படைக் கல்விக் கருத்துக்களை, பாலா ஓவியங்கள் (BaLA paintings) மூலம் காட்சித் தகவலாக சுவர்களில் வரைந்து வழங்கப்பட வேண்டும்.

**உ). ஏற்கனவே உள்ள சமையலறைகளை பழுது நீக்கம் செய்தல்**

பழுதடைந்த ஆனால் கட்டமைப்பு உறுதியான நிலையிலுள்ள சமையலறைக் கூடங்கள், 5 வருடங்களுக்குள் பிற திட்டங்களின் கீழ் பழுதுநீக்கப் பணி மேற்கொள்ளப்படாதிருப்பின், பழுதுநீக்கம்/ புதுப்பித்தல் பணியை மேற்கொள்ளலாம்.

### 3) பணிகள் தெரிவு செய்தல் மற்றும் இறுதி செய்தல்

அ. பணிகளை தேர்வு செய்து, இறுதி செய்கையில் கீழ்க்கண்ட செயல்முறைகளை கடைபிடித்தல் வேண்டும்.

i. எடுக்கப்பட வேண்டிய பணிகள் குறித்த விவரங்கள் அடங்கிய பட்டியல் தயார் செய்ய கீழ்க்கண்ட உறுப்பினர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட வேண்டும்

   i. வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி)
   ii. உதவிப் பொறியாளர் (ஊரக வளர்ச்சி)/ ஒன்றிய பொறியாளர் / இளநிலை பொறியாளர்
   iii. சம்பந்தப்பட்ட வட்டாரக் கல்வி அலுவலர்
   iv. சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர்
   v. சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர்

ii. மேற்படி குழுவானது, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளி வளாகங்களில் உள்ள கட்டடங்கள் பயன்பாடுகள், விளையாட்டு மைதானம் ஆகியவற்றை ஆய்வு செய்து, தேவையான பதிவுகளை EMIS (Educational Management Information System)-ல் பதிவேற்றம் செய்ய வேண்டும். (பள்ளி தலைமையாசிரியர் EMIS-ல் பதிவேற்றம் செய்வார்). இக்குழுவானது, ஊராட்சி ஒன்றிய ஆரம்ப/நடுநிலைப் பள்ளிகளில் எடுக்கப்பட வேண்டிய பணிகளை இறுதி செய்யும்.

iii. பழுதுபார்த்தல் பணிகளை இறுதி செய்ய வேண்டி "மதிப்பீட்டுத்தாள்" எனப்படும் விரிவான படிவம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரால் அனுப்பி வைக்கப்படும்.

iv. பணிகளின் பட்டியல் குழுவால் இறுதி செய்யப்பட்டவுடன், அவை TNRD (SIDS module) இணையதளத்தில், பதிவேற்றம் செய்யப்படும்.

ஆ. ஒரு குறிப்பிட்ட பள்ளிக் கட்டடம், சமையலறைக்கூடம் அல்லது கழிப்பறை, பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் இருந்தால் அதற்கு பதிலாக புதிய கட்டடம் தேவைப்படும் என குழு கருதினால், தற்போது உள்ள கட்டடத்தை இடிக்க பரிந்துரை செய்யலாம். அதன்படி, அரசாணை (நிலை) எண்.56, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி-4) துறை, நாள்.03.04.2008 மற்றும் அரசாணை (நிலை) எண்.28, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (மா.அ.தி.4) நாள்:23.02.2015-ல் வெளியிடப்பட்டுள்ள திருத்தம் ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி, உரிய வழிமுறைகளை பின்பற்றி கட்டடத்தை இடிக்க செயற்பொறியாளர் (ஊ.வ) உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இ. இப்பணிகளின் முன்னேற்றத்தை TNRD இணையதளத்திலுள்ள (SIDS module)-இல் தொடர்ந்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.

4. **தேர்வு செய்யப்பட்ட பணிகளை சோதனை சரிபார்ப்பு**

மதிப்பீடு தயாரிப்பதற்கு, ஆரம்பம் முதல் முறையான கள ஆய்வு மேற்கொள்வது அவசியம் ஆகும். அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட பணிகளை, சோதனை முறையில் சரிபார்த்தால் தான் சரியான மதிப்பீடு தயாரிக்க ஏதுவாயிருக்கும். சோதனை சரிபார்த்தல் (Test check) பணியின் போது கீழ்க்கண்டவைகள் உறுதி செய்யப்பட வேண்டும்.

i. பணிகளில் தேவையான இனம் ஏதேனும் தவறுதலாக விடுபட்டுள்ளதா ?
ii. பணிகளில் தேவையில்லாத இனம் தவறுதலாக சேர்க்கப்பட்டு உள்ளதா ?
iii. விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளதா ?

iv. இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படாத இனம் எதுவும் சேர்க்கப்பட்டுள்ளதா ? என சரிபார்ப்பு செய்ய வேண்டும்.

பணிகள் தேர்வு செய்யப்பட்ட பள்ளிகளில், சோதனை சரிபார்ப்பை கீழ்க்கண்ட அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும்.

1. மாவட்ட ஆட்சியர் : 1%
2. திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை : 10%
3. செயற்பொறியாளர் (ஊ.வ) : 20%

உதவி இயக்குநர் நிலை அலுவலர்கள்/உதவி செயற்பொறியாளர் (ஊ.வ) 100 % சரிபார்ப்பு மேற்கொள்ள வேண்டும்.

## 5. நிர்வாக அனுமதி

மாவட்ட ஆட்சித் தலைவரால் நிர்வாக அனுமதி வழங்கப்பட வேண்டும். நிர்வாக அனுமதி வழங்கும் முன் ஒவ்வொரு கருத்துருவுடன் கீழ்க்கண்ட ஆவணங்கள் உள்ளனவா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

i. பத்தி 3-ல் குறிப்பிட்டுள்ள தேர்வுக்குழுவிலுள்ள உறுப்பினர்களால் கையொப்பமிடப்பட்ட "மதிப்பீட்டுத் தாள்".
ii. பத்தி 4-ல் குறிப்பிட்டுள்ளவாறு, மாவட்ட அளவிலான அலுவலர்களால் உரிய சோதனை சரிபார்த்தல் மற்றும் உதவி இயக்குநர்/உதவி செயற்பொறியாளர் (ஊ.வ) நிலை அலுவலர்கள் 100% சோதனை சரிபார்த்தலை திருப்திகரமாக நிறைவு செய்ததை உறுதி செய்தல்.
iii. ஒவ்வொரு பணிக்கும் விரிவான மதிப்பீடு தயார் செய்ய வேண்டும். எத்தகைய நிலையிலும் தோராய மதிப்பீட்டின் அடிப்படையில் கருத்துரு அனுப்புதல் கூடாது.
iv. பள்ளிக் கட்டடம்/சமையலறைக் கூடம்/கழிப்பறைக் கட்டடங்களின் உள் மற்றும் வெளிப்புறத்தோற்றத்தின் பல்வேறு புகைப்படங்கள் மதிப்பீட்டுடன் இணைக்கப்பட வேண்டும். புகைப்படங்கள் இணைக்கப்படவில்லை

எனில் மாவட்ட ஆட்சித் தலைவரால் நிர்வாக அனுமதி வழங்கப்படக் கூடாது.

குறிப்பு –

பணிகளின் எண்ணிக்கையை உறுதி செய்யும் நோக்கத்திற்காகவும் அல்லது பணிகளின் விரிவான மதிப்பீடுகள் பெறவும் பணிகளை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

- ஒரு பள்ளி வளாகத்திற்குள் உள்ள அனைத்து பள்ளிக் கட்டடம்/ வகுப்பறைகள் பழுதுநீக்கம் செய்வதை ஒரு பணியாக எடுத்துக் கொள்ள வேண்டும்.
- ஒரு பள்ளியிலுள்ள அனைத்து கழிப்பறைகளையும் பழுதுநீக்குவதை ஒரு பணியாக எடுத்துக் கொள்ள வேண்டும்.
- ஒரு பள்ளியிலுள்ள சமையலறையின் பழுதுநீக்கம் செய்யும் பணிகள் அனைத்தையும் ஒரு பணியாக எடுத்துக் கொள்ள வேண்டும்.
- ஒரு பள்ளியில் பழுது பார்க்கப்படும் அனைத்து குடிநீர் வசதிக்கான பணிகளையும் ஒரு பணியாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

எடுத்துக்காட்டு

ஒரு பள்ளி வளாகத்திற்குள் 2 பள்ளி கட்டடங்கள், 2 கழிப்பறைகள், 1 சமையலறைக் கூடம் ஆகியவற்றை பழுதுநீக்கம் செய்யும் பணிகள், 1 புதிய குடிநீர் பணி மற்றும் 1 புகையில்லா அடுப்பு அமைக்கும் பணி ஆகிய பணிகளை எடுக்கும் பொழுது கீழ்க்கண்டவாறு பணிகளின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யலாம்.

1- பள்ளிக் கட்டடம் பழுதுநீக்கம் செய்யும் பணி
1-கழிப்பறைக் கட்டடம் பழுதுநீக்கம் செய்யும் பணி
1-சமையலறைக் கூடம் பழுதுநீக்கம் செய்யும் பணி
1-புதிய குடிநீர் பணி
1-புதிய புகையில்லா அடுப்பு

இவ்வாறாக அவ்வளாகத்திற்குள் மொத்தமாக 5 பணிகள் எடுக்கப்பட வேண்டும்.

**6. தொழில் நுட்ப அனுமதி**

அரசாணை (நிலை) எண்.111, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா-1) துறை, நாள் 21.08.2018-ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி தகுந்த தொழில்நுட்ப அதிகாரிகளால் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட வேண்டும்.

**7. பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி**

ஒப்பந்தப்புள்ளி நடைமுறையில் ஒப்பந்தப்புள்ளி விதிகளை கவனமாக பின்பற்ற வேண்டும். மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering) மூலம் பணிகள் மேற்கொள்ளப்படும். வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) ஒப்பந்தப் புள்ளி கோரும் மற்றும் ஏற்கும் அதிகாரம் உடையவராவார்.

தமிழ்நாடு ஒளிவு மறைவு அற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-ன் படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, அரசாணை (நிலை) எண்.203, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா-1) துறை, நாள்.20.12.2007-ல் வெளியிடப்பட்ட தமிழ்நாடு ஊராட்சிகள் (திட்டங்கள் தயாரித்தல், பணிகளுக்கான மதிப்பீடுகள் மற்றும் ஒப்பந்தங்களுக்கான நிபந்தனைகள்) விதிகள் 2007-ன் அறிவிக்கை II-ல் கண்டுள்ள அட்டவணை I மற்றும் II-ல் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறைகளை பின்பற்றி ஒப்பந்தப் புள்ளி கோரும் மற்றும் ஏற்கும் அதிகாரத்தை செயல்படுத்த வேண்டும்.

ஒரு பள்ளியில் உள்ள அனைத்து பராமரிப்பு/பழுதுநீக்கம் செய்யும் பணிகள், ஒப்பந்தப்புள்ளி கோரும்பொழுது ஒரு பணியாக எடுத்துக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு பள்ளிக் கட்டிடம் பழுதுநீக்கம்/ஒரு கழிப்பறை பழுதுநீக்கம்/ஒரு சமையலறைக் கூடம் பழுதுநீக்கம்/ஒரு குடிநீர் பணி ஆகிய பணிகள் ஒரே தொகுப்பாக கணக்கிடப்பட்டு, அத்தொகுப்பிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட வேண்டும்.

**8. செயல்படுத்தும் நடைமுறை**

அரசாணை (நிலை) எண்.111, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா-1) துறை, நாள்.21.08.2018-ன் படி, இத்திட்டத்தின் கீழ்

மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு அளவீடு மற்றும் மேலளவு மேற்கொள்ளப்பட வேண்டும்.

9. நிதி

மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்படும் மதிப்பீடுகளின் அடிப்படையில் மாவட்டங்களுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரால் தேவையின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இத்திட்டத்திற்கென பராமரிக்கப்படும் தனி வங்கி கணக்கில் இருந்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு பணிகளின் முன்னேற்றத்தின் அடிப்படையில் நிதியை விடுவிப்பார். இத்திட்டத்திற்கு மாவட்ட அளவிலான தனி வங்கி கணக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களால் பராமரிக்கப்பட வேண்டும். இதுபோல், வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), வட்டார அளவில் தனி வங்கி கணக்கு பராமரிக்க வேண்டும். ஊராட்சி ஒன்றியங்களில் இருந்து பெறப்படும் முன்மொழிவுகளின் அடிப்படையில், மாவட்ட ஆட்சித் தலைவர் நிதியை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கீடு செய்து பணிகளின் முன்னேற்றத்தின் அடிப்படையில் நிதியை விடுவிப்பார்கள். அனைத்து வங்கிக் கணக்குகளும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் மட்டுமே தொடங்கப்படும்.

10. தரக்கட்டுப்பாடு

பணிகளை செயல்படுத்தும் நிறுவனம், அனைத்து கட்டுமானப் பொருட்களையும் சோதனை செய்வதற்கு தரக் கட்டுப்பாட்டுப் பதிவேட்டையும், பணித்தள பதிவேட்டையும் பராமரிக்க வேண்டும். இப்பதிவேடுகளை ஆய்வு அதிகாரிகளால் அவ்வப்போது சரிபார்க்கப்பட வேண்டும். மேற்கண்ட தரக்கட்டுப்பாட்டு முறையை தவிர, இந்தத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளின் தரத்தைக் கண்காணிப்பதற்காக மூன்றாம் தரப்பு கண்காணிப்பாளர்கள் அதாவது மாநிலத் தரக் கண்காணிப்பாளர்கள் – SQM (திட்டங்கள்) நியமிக்கப்படுவார்கள்.

**11. ஆவணப்படுத்துதல்**

இத்திட்டத்தில் பணிகளை அடையாளம் காணுதல் முதற்கொண்டு, அதனை முடிக்கும் வரையிலான அனைத்து விரிவான, பலவிதமான நிலைகளிலும் ஆவணங்கள் தயாரித்து பராமரிக்க வேண்டும். பணி தொடங்குவதற்கு முன்பு, முடிவுற்ற பின்பு எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் முழுமை பெற்ற பணியின் நிலை ஆகியவற்றை EMIS-ல் பதிவேற்றப்பட வேண்டும். பணி முடிக்கப்பட்ட பின்பு, திட்டத்தின் பெயர், அதாவது, **"பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்"**, செலவிடப்பட்ட தொகை ஆகியவை புனரமைக்கப்பட்ட கட்டடத்தின் ஒரு பகுதியில், தெளிவாக நன்கு தெரியும் வண்ணம் தமிழில் எழுதப்பட வேண்டும். பணிகள் முடிவுற்றதும், தெளிவான புகைப்படங்கள் (High Resolution Photographs) TNRD இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

அரசு முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்களுக்கு மேற்காணும் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அவ்வப்போது ஏற்படும் சூழ்நிலைகளுக்கேற்ப ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரை கலந்தாலோசித்து, தேவையான மாற்றங்களை செய்ய அதிகாரம் அளிக்கப்படுகிறது.

**பெ.அமுதா**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

//உண்மை நகல்//

20-4-2023
பிரிவு அலுவலர்.